# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண். 05/2021 நாள் 03.09.2021

### உள்ளாட்சி தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேரம் நிர்ணயம் - தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் ஆணை வெளியிட்டது.

* * *

புதியதாக அமைக்கப்பட்ட செங்கல்பட்டு, காஞ்சிபுரம், வேலூர், இராணிபேட்டை, திருப்பத்தூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய 9 மாவட்டங்களில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரணத் தேர்தல்கள் மற்றும் 2019-ல் தேர்தல் நடத்தப்பட்ட 28 மாவட்டங்களில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் 30.06.2021 வரை ஏற்பட்டுள்ள காலி பதவியிடங்களுக்கு நடைபெறவுள்ள தற்செயல் தேர்தலுக்கான வாக்குப்பதிவினை வாக்குப்பதிவு நாளன்று காலை 7.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை நடத்திட தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் நிர்ணயம் செய்து 1.9.2021 அன்று ஆணை வெளியிட்டுள்ளது. கோவிட் - 19 பெருந்தொற்றின் காரணமாக தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிடவும், நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி வாக்குப்பதிவினை நடத்திடவும் கூடுதல் நேரம் தேவைப்படுவதால் மேற்படி ஆணையினை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

கோவிட்-19 தொற்று உள்ளவர்கள் மட்டும் வாக்களிப்பதற்கு ஏதுவாக வாக்குப்பதிவு நாளன்று மாலை 6 மணி முதல் 7 மணி வரை வாக்களிக்க அனுமதிக்கப்படுகிறது.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

3/9/2021

மக்கள் தொடர்பு அலுவலர்